DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.207/2021
*****

Deposition of Witness for Prosecution witness No: PW11

| | | |
|---|---|---|
| பட்டியல் சாட்சி | | LW13 |
| Name | : | **டாக்டர். பரகத் நிஷா** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 28.11.2023 |

**( Accused absent. For accused Petition u/s 317 Cr.Pc is filed and allowed. )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது சேர்ந்தமரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2019 ல் அதிகாலை 02.15 மணியளவில் நான் சிவகிரி அரசு மருத்துவனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது, குருசாமி என்பவரை சம்பத் என்பவர் அழைத்து மருத்துவமனைக்கு வந்தார். அவரை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 22.02.2019 அதிகாலை 01.00 மணியளவில் அரிவாளால் தாக்கியதாக இடது முன் கையிலும், மணிகட்டிற்கு மேல் இடது மார்புக்கு மேல் பகுதியில் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்த போது, இடது முன் கையில் மணிகட்டிற்கு மேல் 12X2.5cm சிதைந்த காயம் எலும்பு தெரிந்த நிலையில் மற்றும் இடது மார்புக்கு மேல் பகுதியில்

5X2 cm காயம் இருந்தது. அவருக்கு நான் சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அறுவை சிகிச்சை செய்து அந்த சிகிச்சையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சான்று குருசாமிக்கு வழங்கப்பட்ட மருத்துவ சான்று ஆகும். அது அ.சா.ஆ.6 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர். காயம்பட்டவர் என்னிடம் சொன்ன நாள் நேரத்தில் அவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் பொழுது மயக்க நிலையில் இருந்தாரா என்றால் நான் அவரை பரிசோதித்த பொழுது மயக்க நிலையில் இல்லை. காயம்பட்ட நபர் உங்களிடம் சிகிச்சை பெறும்பொழுது விபத்து பதிவேட்டில் நீங்கள் தற்போது சொல்லியுள்ள காயங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தா என்றால் அவர் தன்னை அரிவாளால் தாக்கியதாக தான் சொல்லியுள்ளார். அது தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் தற்பொழுது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியவாறு தான் போலிசார் விசாரணையிலும் சொன்னீர்களா என்றால் ஆமாம். பொதுவாக கத்தியின் அளவு அடிப்படையில் தான் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் தாக்கும் நபரின் வேகம், கத்தியின் அளவு, இரண்டு நபர்களிடம் இருக்கும் இடைவெளி ஆகியவற்றின் அடிப்படையில் தான் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. காயம்பட்ட நபருக்கு சிசிச்சை அளிக்கும் பொழுது அந்த காயங்கள் சிதைந்த காயம் என்று தான் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். சிதைந்த காயங்கள் கத்தியால் குத்தும்போது ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் மறுக்கிறேன். சிதைந்த காயங்கள் என்பது வாகனத்தில் இருந்து கிழே விழும்பொழுது, படியில் இருந்து வேகமாக தவறி விழும் போது ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

**ம.வி இல்லை.**